பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

16 04 2025 7 15
புதன்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்-</u>

1. இந்தியாவுக்கான வெளிநாட்டு தூதர்கள் வடகிழக்கு மாநிலங்களின் சிறப்புகளை குறித்து பிரபலப்படுத்துமாறு வெளியுறவுத்துறை அமைச்சர் திரு ஜெய்சங்கர் கேட்டுக் கொண்டுள்ளார்.
2. உள்நாட்டு நீர்வழி சரக்குப் போக்குவரத்து 145 புள்ளி ஐந்து மில்லியன் டன்னை எட்டி சாதனை படைத்துள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.
3. இந்தியா – அமெரிக்கா இடையேயான வர்த்தகம் 2030-ஆம் ஆண்டுக்குள் 500 பில்லியன் டாலரை எட்டும் என மத்திய அரசு கூறியுள்ளது.
4. நாட்டில் இந்த ஆண்டு தென்மேற்கு பருவமழை இயல்பைவிட அதிகமாக பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.
5. உலகக்கோப்பை துப்பாக்கி சுடும் போட்டியில் இந்தியாவின் சுருச்சி சிங் தங்கப்பதக்கம் வென்றார்.

<u>*---- இனி விரிவான செய்திகள் ---*</u>

**[]<<<>>>[]**

இந்தியாவுக்கான வெளிநாட்டு தூதர்கள் வடகிழக்கு மாநிலங்களின் சிறப்புகளை அறிந்து, அது குறித்து தத்தமது நாட்டு அரசு மற்றும் தொழில் துறையினரிடம் எடுத்துரைக்குமாறு வெளியுறவுத்துறை அமைச்சர் திரு ஜெய்சங்கர் கேட்டுக் கொண்டுள்ளார்.

வடகிழக்கு மாநில மேம்பாட்டுத்துறை சார்பில் நடைபெற உள்ள வடகிழக்கு முதலீட்டாளர் மாநாடு குறித்து வெளிநாட்டு தூதர்களிடையே காணொலி வாயிலாக உரையாற்றிய அவர், பிம்ஸ்டெக் உட்பட இந்தியாவின் பல்வேறு முக்கிய கொள்கைகள் வடகிழக்கு மாநிலங்களை சார்ந்து அமைந்திருப்பதை சுட்டிக்காட்டினார்.

வடகிழக்கு மாநிலங்கள், ஐந்து அண்டை நாடுகளின் எல்லைகளையொட்டி அமைந்திருப்பதுடன், இந்திய துணைக் கண்டத்திற்கும், ஆசியான் நாடுகளுக்கும் இடையேயான நுழை வாயிலாகவும் திகழ்வதாக அவர் கூறினார்.

வடகிழக்கு மாநிலங்களின் வளர்ச்சிக்கு மத்திய அரசு முன்னுரிமை அடிப்படையில் பணியாற்றி வருவதாகவும் திரு ஜெய்சங்கர் தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

அனைத்துத் தரப்பு மக்களுக்கும் நீதி கிடைக்கச் செய்வதற்காகவே வக்ஃப் திருத்தச் சட்டம் கொண்டுவரப்பட்டிருப்பதாக மத்திய சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் திரு கிரண் ரிஜிஜூ தெரிவித்துள்ளார்.

கேரள மாநிலம் முனம்பம் பகுதியில் மக்கள் நீண்ட காலமாக வசித்து வரும் இடம் தங்களுக்குச் சொந்தமானது என வக்ஃப் வாரியம் உரிமை கோரியதை எதிர்த்து போராட்டம் நடத்தி வருபவர்களை சந்தித்து பேசிய அவர், இந்த பிரச்சினைக்கு பிரதமர் திரு நரேந்திரமோடி தீர்வு காண்பார் என உறுதியளித்தார்.

மதச்சார்பற்ற நாடான இந்தியாவில் அனைத்து தரப்பினரையும் சமமாக கருதும் சட்டங்கள் தேவை என்று கூறினார்.

அந்த வகையில்தான் வக்ஃப் வாரியத்துக்கு அளவற்ற அதிகாரம் வழங்கி வந்த சட்டத்தை தற்போது மாற்றி இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அதேவேளையில் மத்திய அரசு இஸ்லாமியர்களுக்கு எதிரானது அல்ல என்றும், வக்ஃப் சொத்துக்களை முறைப்படுத்துவதற்குத்தான் திருத்தச் சட்டம் கொண்டுவரப்பட்டிருப்பதாகவும் திரு கிரண் ரிஜிஜூ தெரிவித்தார்.

[]<<<>>>[]

வக்ஃப் திருத்தச் சட்டம் தொடர்பான பாகிஸ்தானின் கருத்துக்கள் அடிப்படை ஆதாரமற்ற உள்நோக்கம் கொண்டவை என மத்திய அரசு கண்டனம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக ஊடகங்களின் வெளியான செய்திக்கு பதிலளித்துள்ள வெளியுறவுத்துறை செய்தி தொடர்பாளர் திரு ரன்தீர் ஜெய்ஸ்வால், இந்தியாவின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிட பாகிஸ்தானுக்கு தகுதியில்லை என்று கூறியுள்ளார்.

பாகிஸ்தானில் வசிக்கும் சிறுபான்மையினரின் நலன்களை பாதுகாப்பதில் அந்நாட்டு அரசு அக்கறை காட்டினால் போதும் என்றும் திரு ஜெய்ஸ்வால் தெரிவித்துள்ளார்.

[]<<<>>>[]

மத்திய அரசின் புதிய கொள்கை அடிப்படையில் தில்லியில் ஒரு லட்சத்து 36 ஆயிரம் சதுர கிலோமீட்டர் பரப்பளவில் பெட்ரோல் மற்றும் இயற்கை எரிவாயு எடுப்பதற்கான உரிமங்களை பெட்ரோலியத்துறை அமைச்சர் திரு ஹர்திப்சிங் பூரி நேற்று வழங்கினார்.

புதுதில்லியில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் பேசிய அவர், நாட்டில் இதுவரை பயன்படுத்தப்படாத எரிசக்தி வளங்களை பயன்படுத்தவும், எரிபொருளுக்காக இறக்குமதியை சார்ந்திருப்பதை குறைக்கவும் உதவும் என்றார்.

இந்த ஏலம் எரிசக்தித் துறையில் அதிக பலனளிப்பதாக அமையும் என்றும் அவர் கூறினார்.

வெளிநாட்டு முதலீட்டாளர்களுடன் இணைந்து கூட்டு முயற்சிகளை மேற்கொள்ளவும், தொழில்நுட்ப உதவியை பெறுவதற்கான வாய்ப்புகளை தொழில்துறையினர் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் எனவும் திரு ஹர்திப் சிங் பூரி கேட்டுக் கொண்டார்.

[]<<<>>>[]

இத்தாலி சென்றுள்ள பாதுகாப்புத்துறை செயலர் திரு ராஜேஷ் குமார் சிங், ரோம்நகரில் நேற்று அந்நாட்டு பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு **Guido crosetto** –வை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

இந்த பேச்சுவார்த்தை ஆக்கப்பூர்வமாக அமைந்ததாகவும், இந்தியா -இத்தாலி இடையேயான நீடித்த நட்புறவின் முக்கிய அம்சமாக திகழும் ராணுவ ஒத்துழைப்பை அதிகரிக்க உதவியாக இருக்கும் என்றும் பாதுகாப்புத்துறையின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இந்தியா -இத்தாலி இடையேயான வருடாந்திர இருதரப்பு ராணுவ கூட்டுக்குழு கூட்டத்திற்கும் இரு நாடுகளின் பாதுகாப்புத்துறை செயலாளர்களும் கூட்டாக தலைமை வகித்தனர்.

இந்த கூட்டத்தின்போது பாதுகாப்பு மற்றும் கடல்சார் தொழில் துறைகளில் ஒத்துழைப்பை அதிகரிப்பது குறிதும் பிரிவாக விவாதிக்கப்பட்டது.

செங்கடல் மற்றும் இந்திய பெருங்கடல் பிராந்தியத்தின மேற்குப்பகுதியில் நிலவும் பாதுகாப்பு சூழல் குறித்தும் விவாதிக்கப்பட்டதாக பாதுகாப்புத்துஐற செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது,

[]<<<>>>[]

உள்நாட்டு நீர்வழி சரக்குப் போக்குவரத்து கடந்த நிதி ஆண்டில் 145 புள்ளி ஐந்து மில்லியன் டன்னை எட்டி சாதனை படைத்துள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

மத்திய துறைமுகங்கள், கப்பல் மற்றும் நீர்வழி போக்குவரத்து அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், இந்த காலகட்டத்தில் 18 புள்ளி ஒன்று பூஜ்ஜியம் மில்லியன் மெட்ரிக் டன் அளவுக்கு சரக்கு போக்குவரத்து அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது முந்தைய ஆண்டைவிட ஒன்பது புள்ளி மூன்று நான்கு சதவீதம் அதிகம் என்றும் அதில் கூறப்பட்டுள்ளது.

நிலக்கரி, இரும்புதாது, மணல் மற்றும் நிலக்கரி சாம்பல் போன்ற பொருட்கள் 68 சதவீத அளவுக்கு எடுத்துச் செல்லப்பட்டதாகவும் அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

[]<<<>>>[]

இந்தியா – அமெரிக்கா இடையேயான வர்த்தகம் 2030-ஆம் ஆண்டுக்குள் 500 பில்லியன் டாலரை எட்டும் என மத்திய அரசு தெரிவித்துள்ளது.

புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய மத்திய வர்த்தகத்துறை செயலாளர் திரு சுனில் பர்த்வால், அமெரிக்காவின் தற்போதைய வரி விகிதங்களால் இந்தியாவுக்கு வாய்ப்புகளும், பாதிப்புகளும் இருப்பதாகக் கூறினார்.

எனினும் வர்த்தக தாராளமயமாக்கல் பாதையை இந்தியா பின்பற்றுவதாகவும், அதன் அடிப்படையில் அமெரிக்காவுடன் வர்த்தக உடன் படிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

இருதரப்புக்கும் பயனளிக்கக்கூடிய அம்சங்களின் அடுத்தக்கட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வது குறித்து இரு நாடுகளிடையே ஒருமித்த கருத்து ஏற்பட்டிருப்பதாகவும் திரு சுனில் பர்த்வால் குறிப்பிட்டார்.

[]<<<>>>[]

மேற்குவங்க மாநிலத்தின் சுந்தரவனப் பகுதியில் கடலோர எல்லை கிராமம் வழியாக இந்தியாவுக்குள் ஊடுறுவ முயன்ற பங்ளாதேஷ் நாட்டைச் சேர்ந்த 24 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நான்கு குழந்தைகள், 11 பெண்கள் உள்ளிட்ட இவர்கள் அனைவரும் ஷில்மாரி வனப்பகுதியை ஒட்டிய கிராமத்தில் கைது செய்யப்பட்டதாக பரோய்பூர் மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் திரு பலாஸ் சந்திர தலி தெரிவித்துள்ளார்.

[]<<<>>>[]

இந்தியாவிலிருந்து நிலப்பகுதி வழியாக நூல் இழைகளை இறக்குமதி செய்ய பங்ளாதேஷ் அரசு தடை விதித்துள்ளது.

அந்நாட்டின் தேசிய வருவாய் வாரியம் இதற்கான அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

பினாப்போல், போம்ரா உள்ளிட்ட ஐந்து பகுதிகள் வழியாக நூல் இழைகளை இறக்குமதி செய்ய இனி அனுமதி அளிக்கப்பட மாட்டாது என்றும் அந்நாடு தெரிவித்துள்ளது.

பங்களாதேஷ் அரசின் இந்த நடவடிக்கை தங்களது தொழிலுக்கு பெரும் பின்னடைவை ஏற்படுத்தும் என அந்நாட்டு ஆயத்த ஆடை உற்பத்தியாளர் மற்றும் ஏற்றுமதியாளர் சங்கம் கவலை தெரிவித்துள்ளது.

[]<<<>>>[]

நாட்டில் இந்த ஆண்டு தென்மேற்கு பருவமழை இயல்பைவிட அதிகமாக பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையத்தின் தலைமை இயக்குநர் திரு மிருத்யூஞ்சை மொகபத்ரா தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், ஜூன் முதல் செப்டம்பர் வரையிலான காலகட்டத்தில் 105 சதவீத அளவுக்கு மழைப்பொழிவு இருக்கும் என்று கூறினார்.

குறிப்பாக வடகிழக்கு, வடமேற்கு மற்றும் தென்னிந்திய தீபகற்பப் பகுதிகளில் இயல்பைவிட குறைவாக மழை பெய்யக்கூடும் என்றும் அவர் தெரிவித்தார்.

எல்நினோ பாதிப்புகள் வரவிருக்கும் பருவமழைக் காலத்திலும் தொடரும் என்றும் திரு மொகபத்ரா குறிப்பிட்டார்.

**[]<<<>>>[]**

உலகக்கோப்பை துப்பாக்கி சுடும் போட்டியில் இந்தியாவின் சுருச்சி சிங் தங்கப்பதக்கம் வென்றார்.

பெருவின் லிமாவில் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் பத்து மீட்டர் ஏர் பிஸ்டல் பிரிவில் அவர் இப்பதக்கத்தை வென்றார்.

மற்றொரு வீராங்கனை மனுபாக்கர் வெள்ளிப்பதக்கம் வென்றார்.

ஆடவர் பிரிவில் இந்தியாவின் சவ்ரவ் சௌத்திரி பத்து மீட்டர் ஏர்பிஸ்டல் பிரிவில் வெண்கலப்பதக்கம் வென்றார்.

**[]<<<>>>[]**

ஐ பி எல் கிரிக்கெட் போட்டியில் நேற்று நடைபெற்ற கொல்கத்தா அணிக்கு எதிரான ஆட்டத்தில் 16 ரன் வித்தியாசத்தில் பஞ்சாப் அணி பெற்றிபெற்றது.

சண்டிகரில் நடைபெற்ற இப்போட்டியில் முதலில் பேட் செய்த பஞ்சாப் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 111 ரன் எடுத்தது.

112 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய கொல்கத்தா அணி 15 புள்ளி ஒரு ஓவரிலேயே 95 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

இன்று நடைபெறும் ஆட்டத்தில் தில்லி அணி – ராஜஸ்தான் அணியை எதிர்கொள்கிறது.

இப்போட்டி தில்லியில் இரவு மணி 7-30-க்கு தொடங்குகிறது.

**[]<<<>>>[]**

இந்திய ஓப்பன் தடகளப் போட்டியின் ஆடவர் ஈட்டி எறிதல் பிரிவில் யஷ்வீர் சிங் பட்டத்தை வென்றார்.

சென்னையில் நேற்று நடைபெற்ற இப்போட்டியில் அவர் 77 புள்ளி நான்கு ஒன்பது மீட்டர் தூரத்திற்கு ஈட்டி எறிந்து சாதனை படைத்துள்ளார்.

இப்போட்டியில் கிஷோர் ஜெனா இரண்டாவது இடத்தைப் பெற்றார்.

**[]<<<>>>[]**

2028-ஆம் ஆண்டு லாஸ் ஏஞ்சல்ஸில் நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டியில் கிரிக்கெட் போட்டிகள் தெற்கு கலிபோர்னியாவில் உள்ள **Pomona**-வில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

***End of News***